கவிஞர். முருகு தயாநிதியின்

# படுவான்கரைக்கு வந்துபார் தம்பி...



Divisional Secretary
Manmunai South West
Paddiruppu

# படுவான்கரைக்கு வந்துபார் தம்பி

கவிஞர் முருகு தயாநிதி

வெளியீடு

சோஜயஹரி

தலைப்பு : படுவான்கரைக்கு வந்துபார்
ஆசிரியர் : முருகு தயாநிதி
உரிமை : திருமதி தயாநிதி சாரதாதேவி
முதற்பதிப்பு : 2018
வெளியீடு : சோஜயஹறி
பக்க வடிவமைப்பு : முருகு தயாநிதி
அட்டை வடிவமைப்பு : ஹறி அச்சகம் வெள்ளவத்தை
தாள் : 80 GSM
நூலின் அளவு : A5
பக்கங்கள் : 88
விலை : 250.00

**Title** : Paduvankaraikku Vanthpar
**Author** : Murugu Thayanithy
**Copy Right** : Thayanithy Sarathadevi
**First Edition** : 2018
**Publisher** : Shoyayahari
**Lay Out** : Murugu Thayanithy
**Cover Disign** : Hare Printers, Wellawatta
**Paper** : 80 GSM
**Page** : 88
**Price** : 250.00

# முன்னுரை

கவிஞர் முருகு. தயாநிதி எனது அன்புக்குரிய மாணவர்களில் ஒருவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் என்னிடம் பயின்றவர். இயல்பாகவே கவிதைத்துறையில் ஈடுபாடு கொண்டவர். தமக்குக் கைவரக்கூடிய மரபுக் கவிதையிலேயே தம் மனத்தைச் செலுத்துபவர். முருகு .தயாநிதி ஏற்கனவே படிக்கும்போதே... (2007) என்ற கவிதைத் தொகுதியை வெளிக்கொணர்ந்தவர்.

இலக்கியவாதிகளுக்கு இயல்பாகவே இருக்கக்கூடிய சமுதாயப் பார்வையை முருகு. தயாநிதி தம்மகத்தே கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது. தம்மைச் சுற்றியுள்ள சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டவேண்டும் என்ற ஆர்வம் அவரிடத்து இடம்பெற்றுள்ளமையை, அவரது கவிதைகள் பொதுவாகக் காட்டுகின்றன. தமது மண், தமது இனம், தமது நாடு என்ற உணர்வுடன் அவரது கவிதைகள் பல படைக்கப்பட்டிருப்பதை இத் தொகுதியில் பரவலாகக் காணமுடிகிறது.

இக்கவிதைத் தொகுதியைப் புரட்டும்போதே முதலில் நம் கண்ணில் படுவது, படுவான்கரை மண்தான். 'படுவான்கரைக்கு ஒருதரம் வந்துபார் தம்பி,' 'படுவான்கரைக்குப் போனேனம்மா,' 'படுவான்கரைப் பெண்' என்று, தமது ஆசை தீரப் படுவான்கரை மண்ணைப் புரட்டிப் புரட்டிக் காட்டுகிறார், கவிஞர். 'படுவான்கரைக்கு ஒருதரம் வந்துபார் தம்பி' என்ற கவிதையில் இருந்து ஒருசில வரிகளைக் காட்டலாம்:

> "படுவான் கரைக்கு வந்துபார் தம்பி
> தொடுவானம் அங்கு இருக்குது தம்பி
> நடு ஆற்றில் உன்னை விடார் தம்பி
> கடுமையாய் உழைத்து வாழ்வார் தம்பி
> படுவான் கரைக்கு வந்துபார் தம்பி."

உண்மையில் படுவான்கரை கொடுத்துவைத்த மண்தான். அதன் செழிப்பு, கவிஞரின் கைகளில் மேலும் சிறப்புப் பெறுகிறது.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள 'விளையாட்டு' என்ற கவிதை, சிறுவர் சிறுமியரின் சின்ன வயது விளையாட்டுக்களைச் சிறப்பாகக் காட்டுகிறது. பல்வேறு சிறுவயது விளையாட்டுக்களை எல்லாம் காட்டி, வயது வந்த பின்னர் அவை எல்லாம் இல்லாமல் போய்விடும் என்பதை,

"ஆடிய ஆட்டமும்
ஓடிய ஓட்டமும்
எங்கேயோ அவை எல்லாம்"

என்று கவிஞர் குறிப்பிடுவது சுவாரசியமாக உள்ளது.

நமது நாட்டில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாகப் பெற்றோரைப் பிரிந்த பிள்ளைகளும் அநேகம். பாசத்தைத் தொலைத்துவிட்ட பிள்ளைகளின் ஏக்கம் சொல்லிமாளாது. அத்தகைய ஒரு பிள்ளையின் ஏக்கத்தை ஒரு கவிதை வெளிப்படுத்துகிறது. 'அப்பா எப்ப வருவாரம்மா' என்ற அந்தக் கவிதையில் இருந்து சில வரிகள்:

"அப்பா எப்ப வருவாரம்மா
அறிவுக் கதைகள் சொல்வாரம்மா
அல்லல்படும் எமது வாழ்வை
ஆதரிக்க வருவாரம்மா
அப்பா எப்ப வருவாரம்மா."

இக்கவிதையைப் படிப்பவர் நெஞ்சம் சற்று வலிக்கவே செய்யும்.

'எங்கே போனாய் தம்பி?,' 'எல்லை மீறினால்,' கேளடி கிளியே' முதலான கவிதைகள் சூசகமாகச் சில விடயங்களைத் தெரிவிக்கின்றன. தமிழர் மத்தியில் ஒற்றுமை வேண்டும் என்பதை வலியுறுத்தும் கவிதைகளும் பல உள்ளன. 'ஆசைக்கிளி' என்னும் கவிதை, மனிதரின் இயல்புகளைக் கிளி கூறுவதாக அமைந்துள்ளது. 'ஒற்றையடிப்பாதை மனிதன்,' 'ஓ மனிதா,' 'கூட்டம்' போன்றவை, மனிதர் பற்றிய விமர்சனங்களாக அமைந்துள்ளன.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள 'மட்டைப்பந்து விளையாட்டு,' 'யார் கீழ்ச்சாதி,' 'பயம்,' 'என் மணணே்,' 'உன்னை விட்டுச் செல்வேனா,' 'சகுனி,' 'எழுந்துவா மகனே,' போன்ற கவிதைகளும் குறிப்பிடத்தக்கன. மனிதத்துவப் பண்புகளை வாசகர் மனத்தில் விதைக்கவேண்டும் என்பது கவிஞரின் அவா என்பதையும் அவதானிக்க முடிகிறது.

தாம் எழுதிய கவிதைகளைத் தொகுத்து வெளியிடவேண்டும் என்ற கவிஞர் முருகு. தயாநிதியின் ஆவல் புரிந்துகொள்ளத்தக்கது. பல்வேறு விடயங்கள் சார்ந்தவையாகவும் அவரது கவிதைகள் விளங்குகின்றன. கவிதைச் சுவையையும் அனுபவிக்க முடிகிறது. அதேவேளை, மரபுக் கவிதைகள் என்ற முறையில், கவிதைகளில் ஓசை முறிவு ஏற்படாத வகையில் அவற்றைக் கையாள்வதும் அவசியமாகிறது.

முருகு : தயாநிதியின் கவிதை முயற்சி வரவேற்கத்தக்கது. "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்பதற்கேற்ப, அவரது கவிதா முயற்சிகள் எதிர்காலத்தில் மேன்மேலும் சிறக்க வாய்ப்புண்டு. அவருக்கு எனது வாழ்த்துக்கள்!

**பேராசிரியர் துரை. மனோகரன்**
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
பேராதனைப் பல்கலைக் கழகம்.

இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள 'மட்டைப்பந்து விளையாட்டு,' 'யார் கீழ்ச்சாதி,' 'பயம்,' 'என் மணனே்,' 'உன்னை விட்டுச் செல்வேனா,' 'சகுனி,' 'எழுந்துவா மகனே,' போன்ற கவிதைகளும் குறிப்பிடத்தக்கன. மனிதத்துவப் பண்புகளை வாசகர் மனத்தில் விதைக்கவேண்டும் என்பது கவிஞரின் அவா என்பதையும் அவதானிக்க முடிகிறது.

தாம் எழுதிய கவிதைகளைத் தொகுத்து வெளியிடவேண்டும் என்ற கவிஞர் முருகு. தயாநிதியின் ஆவல் புரிந்துகொள்ளத்தக்கது. பல்வேறு விடயங்கள் சார்ந்தவையாகவும் அவரது கவிதைகள் விளங்குகின்றன. கவிதைச் சுவையையும் அனுபவிக்க முடிகிறது. அதேவேளை, மரபுக் கவிதைகள் என்ற முறையில், கவிதைகளில் ஓசை முறிவு ஏற்படாத வகையில் அவற்றைக் கையாள்வதும் அவசியமாகிறது.

முருகு : தயாநிதியின் கவிதை முயற்சி வரவேற்கத்தக்கது. "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்பதற்கேற்ப, அவரது கவிதா முயற்சிகள் எதிர்காலத்தில் மேன்மேலும் சிறக்க வாய்ப்புண்டு. அவருக்கு எனது வாழ்த்துக்கள்!

**பேராசிரியர் துரை. மனோகரன்**
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
பேராதனைப் பல்கலைக் கழகம்.

# முகவுரை

கவிதை உணர்வு என்பது மனிதனை சிந்திக்கச் செய்வதோடு மனதால் மென்மையடையவும் செய்கின்றது. காலத்துக்குக் காலம் கவிதைகள் படைக்கப்பட்டிருக்கின் றன். மேலைநாடு கீழை நாடு என்று கவிஞ்கள் தோன்றி எமக்குத் தந்த கவிதைகள் பலவாகும். அந்தக் கவிதைகள் ஒவ்வொன்றும் அக்காலத்தின் வாழ்வியலைச் சித்திரித்து நின்றன. வாழ்வியலில் மாற்றங்களையும் ஏற்படுத்தின.

நான் சிறுவயதில் இருந்தே சிறிய சிறிய கவிதைகளை எழுதியுள்ளேன். பாடசாலையில் படிக்கும் காலத்தில் எழுதப்பட்ட கவிதைகள் பாடசாலை வாழ்வோடே மறைந்தன. அதனைப் பாதுக்க்க வேண்டும் என்கின்ற எண்ணம் இருக்கவுமில்லை. அதனைப் பாதுக்க்க வேண்டும் என்று யாரும் சொன்னதும் இல்லை. இவ்வாறான காலவேட்டத் தில் 2007 ஆம் ஆண்டு **படிக்கும்போது** எனும் கவிதைத் தொகுதியை வெளியிட்டிருந்தேன். அது பலருடைய அபிமானத்தையும் பெற்றுத் தந்தது. பக்திப் பாடல்களை எழுதியிருந்தேன் அவை அறுவட்டாக வெளிவந்துள்ளன. அதேபோல் படுவான்கரைக்கு ஒருதரம் வந்துபார் தம்பி என்கின்ற கவிதையினை முகநூலில் எழுதியபோது வாழ்த்துக்கள் குவியத் தொடங்கியது. அதனை க.திருவேந்திரனின் முயற்சியால் பாடலாக வெளிவந்தது. அந்தக் கவிதையையே இப்புத்தகத்துக்கு பெயராக வைத்துள்ளேன். நான் முகநூலில் அவ்வப்போது கவிதைகளை எழுதி வந்தேன். அக்கவிதைகளில் பலவும் முகநூல் நண்பர்களைக் கவர்ந்திருந்தது. அக்கவிதைகளுக் கெல்லாம் வாழ்த்துக்கள் வந்தவண்ணமே இருந்தது. கவிதைகள் பெரும் பாலும்-மனிதனுடைய எண்ணங்களின் வெளிப்பாடாகவே இருந்தது. நெடுங் கவிதைகளும் இருந்தன. சிறு கவிதைகளும் இருந்தன. அந்தகைய

கவிதைகள் புத்தகமாக வந்தால் நன்று என்று பலரும் கருத்தத் தெருவித்திருந்தனர். ஆகவேதான் இந்தக் கவிதைகள் தொகுக்கப்பட்டு புத்தகமாக வெளிவருகின்றன. பொருட்பிழைகள், சந்தப்பிழைகள் இருப்பின் திருத்தி வாசித்து திருப்தி பெற்றுக் கருத்துக்களைத் தெரிவிக்கவும். புத்தகமாக வெளிவருவதற்கு ஊன்று கோலாக இருந்த முகநூல் நண்பர்கள், ஏனைய சகோதரர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள். மேலாக பல வேலைப்பளுக்கள் மத்தியிலும் இந்தக் கவிதை நூலுக்கான முன்னுரையினை வடிவமைத்துத்தந்த பெரும் மதிப்புக்குரிய பேராசான் துரை மனோகரன் அவர்களுக்கும் எனது நன்றிகள். அத்தோடு வெளியீடுகளுக்கு எப்போதும் உறுதுணையாக இருக்கும் துணைவியார் சாரதாதேவி, மகள் ஷோபினிகா, ஹர்சினிகா, மகன் ஜயனோவன் ஆகியோருக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

முருகு

# பொருளடக்கம்


படுவான்கரைக்கு ஒருதரம் வந்துபார் தம்பி

எங்கே போனாய் தம்பி

படுவான்கரைக்குப் போனேனம்மா

படுவான்கரைப் பெண்

அப்பா எப்ப வருவாரம்மா

கேட்கிறதா?

விளையாட்டு

கேளடி கிளியே

ஓரணி

ஆசைக் கிளி

ஒற்றயடிப்பாதை மனிதன்

ஓ மனிதா

எழுதுவாரோ

மட்டைப்பந்து விளையாட்டு

இன்னொருவிதி

உரிமையுடன் கல்வி வளர்ப்போம்

கல்

பறந்துவா!

பயம்

தன்மானம்

சரித்திரம் படைப்போம்

நீண்ட பயணம்

பெண்ணே

ஓ மனிதனே!

என்னதான் நடந்தாலும்
என் மண்ணே
இருக்கவேண்டியது
உன்னை விட்டுச் செல்வேனோ
எழுக தம்பி !
பாப்பா
இலக்குப்பார்
பின்முதுகில் குத்தாதே
கோழி
எழுந்துவா மகனே
சகுனி
கூட்டம்
யார் கீழ்ச்சாதி
ஒற்றயடிப்பாதை மனிதன்
விதி
கண்விளி மகனே
ஒளி ஏற்று
ஏன் மகனே ஓடுகிறாய்
எல்லை மீறினால்
ஆவி வருது
இதயமே? எங்கே?
இளைஞர்கள்
படிப்பு
ஏழை வாழ்வு
எங்கள் கிராமம்

## சமர்ப்பணம்

*என்னை இந்நிலைக்கு ஆளாக்கிய அன்புப் பெற்றோர்களுக்கு*

# படுவான்கரைக்கு ஒருதரம் வந்துபார் தம்பி

படுவான்கரைக்கு ஒருதரம் வந்துபார் தம்பி
தொடுவானம் அங்கு இருக்குது தம்பி
நடு ஆற்றில் உன்னை விடார் தம்பி
கடுமையாய் உழைத்து வாழ்வார் தம்பி
படுவான்கரைக்கு ஒருதரம் வந்துபார் தம்பி

அன்புக்கு அடைக்கலம் அவர்கள் தம்பி
ஆன்பாலும் தேனும் தருவார் தம்பி
வீண்போக உன்னை விடார் தம்பி
வீராப்புப் பேச்சையும் மறக்கார் தம்பி

வெடுக்கென்று உன்னைப் பேசார் தம்பி
துடுப்பெடுத்தால் துறை காண்பார் தம்பி
துன்பதுயரம் பிறருக்கு வந்தா தம்பி
துவண்டுதவண்டு தோள் கொடுப்பார் தம்பி

பாலோடு பண்பாடு தருவார் தம்பி
பாதைதனை மாற்றி நடக்கார் தம்பி
நாதியற்று இருக்மாட்டார் தம்பி
நல்ல செயலை வரவேற்பார் தம்பி

கூத்தோடு பாட்டுத் தருவார் தம்பி
கூடநின்று குழி வெட்டார் தம்பி
ஏடெடுத்து இறைவனைத் துதிப்பார் தம்பி
ஏகாந்தம் தனை உரைப்பார் தம்பி

எள்ளளவும் வஞ்சகம் கொள்ளார் தம்பி
கொள்ளயாவும் கதைக்கமாட்டார் தம்பி
வெள்ளைமனம் அவர்களிடம் உண்டு தம்பி
வெளிக்கிட்டால் வீரம் உரைப்பார் தம்பி

கொள்ளியாப் பேய்களுக்கு அஞ்சார் தம்பி
கொள்கையுடன் எப்போதும் வாழ்வார் தம்பி
தள்ளி வைத்தாலும் கொள்ளி வைப்பார் தம்பி
தரங்கெட்ட வாழ்வை வாழார் தம்பி

குரங்குக்குணம் அவர்களிடம் இல்லை தம்பி
நிரந்தர வாழ்வை விரும்புவார் தம்பி
மறந்தாலும் மாற்றுக்கதை பேசார் தம்பி
புறந்தள்ள ஒருபோதும் விரும்பார் தம்பி

மண்ணையே நேசித்து வாழ்வார் தம்பி
தன்னையே உருக்கிக் கொடுப்பார் தம்பி
கண்ணையே இமை காப்பது போல் தம்பி
பெண்மை தனைக் காத்து வாழ்வார் தம்பி

நெஞ்சிலே வஞ்சகம் இல்லை தம்பி
நஞ்சையும் கொள்கைக்காய் அருந்துவார் தம்பி
விஞ்சியும் வாழ்வில் நடக்கார் தம்பி
கெஞ்சி வாழ்வதை விரும்பார் தம்பி

தொட்டனைத்தூறும் மணற்கேணி தம்பி
துயரம் சுமர்ந்த துலாக்கோல் தம்பி
நியமநிஷ்டை அளவைக் கொண்டவர் தம்பி
நியாயத்துக்காய் நீண்டதூரம் போவார் தம்பி

படுவான்கரைக்கு ஒருதரம் வந்துபார் தம்பி
கெடுவாரும் உயர்ந்து வாழ்வார் தம்பி
படிதாண்டி நீயும் நடக்காய் தம்பி
விடிவை நோக்கி எப்போதும் நகர்வாய் தம்பி
படுவான்கரைக்கு ஒருதரம் வந்துபார் தம்பி

# எங்கே போனாய் தம்பி

என்னருமைத் தம்பியே
இயம்பும் வார்த்தை கேட்பீர்
உன்னை நான் மறக்கவில்லை
உலகமும் அழிவதில்லை

கொல்லையிலே வைத்த தீ
கொழுந்துவிட்டு எரியும்போது
புல்லுருவிச் செயல் செய்யப்
பூதமாய் வருகிறார்கள்!

மரணித்துப் போனாய் என்று
மார்பு தட்டுறார்கள்
மண்ணிலே புதைந்தாய் என்று
மாண்புற்று நிற்கிறார்கள்

கண்ணிலே அகப்படாய் என்று
கழிப்புற்று வாழ்கிறார்கள்
தன்னினைவை மறந்து
தத்தளித்து திரிகிறார்கள்

கதிரவன்போல் கனகதிர்
எறிந்துவந்தாய் தம்பி நீ
எதிரியையும் எளிதில்
புரிந்துவைத்தாய் தம்பி நீ

தகுதியை உணர்ந்து
வாழ்ந்திருந்தாய் தம்பி நீ
குருதியை குதறி
எறிந்துநின்றாய் தம்பி நீ!

மாங்காய் புளியங்காய் என்று
உணவுண்டு தம்பி நீ
தூங்காமல் துவளாமல்
செயற்பட்டாய் தம்பி நீ

தங்கு தடையின்றித்
தேங்காமல் சென்று தம்பி
பங்கயம்போல் முகத்தோடு
பாரை வெல்ல இருந்தாய் தம்பி!

வானளந்தவன் வழியில்
வந்தவன் தம்பி நீ
வாட்டமில்லா ஓட்டம்
கொண்டவன் தம்பி நீ

காடுகரம்பெல்லாம்
கடந்தவன் தம்பி நீ
கடுந் தியானம்கொண்டு
வாழ்ந்தவன் தம்பி நீ!

இலக்குத் தவறாமல்
அம்பை விட்டாய் தம்பி நீ
இம்மென்ற குரலை
ஒடுங்கச் செய்தாய் தம்பி நீ

இடிக்குமேல் இடிஇடிக்க
எழுந்து வந்தாய் தம்பி நீ
அடிக்குமேல் அடிவைத்துச்
அஞ்சாமல் சென்றாய் தம்பி நீ!

கத்தும் கடலை
முத்தமிட்டாய் தம்பி நீ
பத்துத்தலை இராவணனை
பணியவைத்தாய் தம்பி நீ

சொத்துச் சுகமெல்லாம்
தூக்கி எறிந்து தம்பி நீ
சுடராக இருந்தாயே
துவளாத மனமுடையோனாய் !

இப்போது எங்கு சென்றாய்
என்னருமைத் தம்பியே நீ
எப்போது திரும்பி வருவாய்
ஆசைத் தம்பியே நீ

முப்புரம் எரித்த ஈசன்கூட
அன்புருக்கொண்டு உனை
முன்னின்று நடத்த வருவான்
எழுந்துவா தம்பி நீ!

# படுவான்கரைக்குப் போனேனம்மா

எங்கே மகனே போயிருந்தாய்
பக்கமெல்லாம் விசாரித்தேன்
திக்கெல்லாம் சுற்றிப் பார்த்தேன்
தென்படவே இல்லையடா
எங்கே மகனே நீ போயிருந்தாய்

படுவான்கரைக்கு ஒருதரம் வந்துபார் தம்பி
கெடுவாரும் உயர்ந்து வாழ்வார் தம்பி
படிதாண்டி நீயும் நடக்காய் தம்பி
விடிவை நோக்கி எப்போதும் நகர்வாய் தம்பி
என்ற கவிதை பார்த்து எண்ணியே இருந்தம்மா
நித்திரை நிமை இல்லாமல் நீண்ட கனவுடனே
சித்திரம்போல் இருந்து சிந்தனையை மறந்து
பத்தும் வெய்யிலிலும் படுவான்வாகரைக்குப் போனேனம்மா

மூச்சும் கையுமாய் முன்பின் பார்க்காமல்
காய்சலுடன் நான்தான் கால்நடையில் போனேன்
முகத்தைப் பார்த்த முதியவர் ஒருவர்
துவிச்சக்கர வண்டியை நிறுத்தியே அம்மா
ஏறுதம்பி ஏறு ஏனிந்த வெயிலில் வாறாய்
மாற்றுக்கதை கதைக்காமல் கரியலில் ஏறவே
கவிபல சொல்லியம்மா காரியம் விசாரித்து

கடப்படிக்குக் கொண்டு இறக்கினார் என்னையுமே
புண்முறுவல் பூத்த அம்மாபோல் ஒருவரங்கு
கண்பட்டுப்போகும் அத்தகைய உபசரிப்பு
வா மகனே என்று வாசலிலே வரவேற்ற
வாத்தைக்கு நிகரான ஆளவுகோல் இல்லையம்மா
தேத்தண்ணிக் கிளாசும் போத்தலில் தண்ணியுமாய்
கிட்டவந்து இருந்து கிரயமாய் வாத்தைபேசி
பட்டதுயர் பலவும் சொல்லி பண்பாடு இதுவென்று
கெட்டுப்போகக்கூடா மகனே கிழக்கு வெளிக்கும் என்றாரம்மா

காவியமாகிய வீர வரலாற்றை உரைத்து
ஓவியமாகவே தீட்டி வைத்தார் அவரம்மா
காவியக்கதைகள இவர்கள் ஆவியில் படிந்ததம்மா
தாவித்திரியாரம்மா பாவிக்குணம் இல்லையம்மா
கெஞ்சாத் தமிழன் என்று நெஞ்சைத் தட்டிச் சொன்ன வாத்தை
ஆவி போனாலும் அடுத்த பிறப்பும் வருமே அம்மா
வஞ்சின உரைகள் சங்ககாலத்தில் இருந்ததம்மா
வாழவைக்கும் உரைகள் இவர் வாத்தையில் கண்டேனம்மா

திருமணம் திருமரணம் எதுவானாலும் அங்கு
திரளான மக்கள்கூட்டம் தினமும் இருக்காரம்மா
பருவிருந்து செல்விருந்தும் பண்புடன் கொடுத்தனுப்பி
படலைக்கு வந்து போகும் வழி பார்த்திருப்பாரம்மா
சுடலைஞானம் இல்லை அம்மா சுயநலமற்றவர்கள்
தடங்கலைச் சந்தித்தாலும் தன்மானம் இழக்காதார்
தலையை அசைத்தால் தலைகொடுக்கத் தயங்காரம்மா
மிடர் அறுந்தாலும் மண்டியிடமாட்டாரம்மா

கெளுத்தி வரால் செப்பலி செல்லுவன் மீனெற்று
சூடாகக் கறிசோறு சுவையாகத் தருவாரம்மா
வரலாற்று மூலங்களை வாய்வழியாச் சொல்கிறார்கள்
முரண்பட்டுக்கொண்டாலும் மனதில் அதை வையாரம்மா
கல்வியில் முன்னேற்றம் படிப்படியாய் வளருதம்மா
கலைக்கழகச் செயற்பாடும் களைகட்டி நிற்குதம்மா
கிராமியக் கலைகள் மீண்டும் சூடு பிடிக்குதம்மா
கிராமங்களின் எழுச்சியும் கிழர்ந்து எழுகுதம்மா

கையிழந்து காலிழந்து கண்ணிழந்து பிறவுறுப்பும்
கையில் மடியில் இல்லாமல் கஸ்டம் வந்தபோதும்
உணர்வை நிறுத்தி உரிமைக்காய் இழந்ததென்று
உரத்த குரலில் பேசி உண்மையை உரைத்தாரம்மா
மெய் சிலுக்குதம்மா மெய் மறந்து போனேனம்மா
செய்கைக்கும் செயலுக்கும் உரந்தந்த உணர்வம்மா
வெய்யில் கொளுத்தினாலும் வெப்பமங்கு தெரியல்லம்மா
தெய்வமே துணையம்மா தேரேறும் அப்பனம்மா

கண்ணீரும் ஓயவில்லை கடினமாய் உழைக்கிறார்கள்
மண்ணையும் பண்படுத்தி மக்களையும் மதிக்கிறார்கள்
ஆலய வழிபாட்டினை ஆண்டவனுக்காய்ச் செய்கிறார்கள்
அடுத்தவர் பேச்சை அன்பாகக் கேட்கிறார்கள்
கொடுத்து உதவியே கொள்கையையும் மதிக்கிறார்கள்
தடுக்க முடியாது தன்மான உணர்வினையும்
மடுக்க நினைத்தாலும் மாட்டுவோம் நாம்தான்
மனிடர் பெருமையெல்லாம் இவர்களிடம் கண்டேனம்மா

கணவனை இழந்த குடும்பம் கனக்க இருக்குதம்மா
க்'ரப்பட்டு வாழ்வை முன்கொண்டு செல்கிறாரம்மா
காணாமல் போனவர்கள் வருவாரென்று அழுறாரம்மா
கடவுளுக்கு நேர்த்திக்கடன் அதிகம் இருக்குதம்மா
ஒன்றாம்மா ரெண்டாம்மா மூன்று நான்கென்று
புள்ளகுட்டியை இழந்த குடும்பங்கள் இருக்குதம்மா
போர்கொண்ட வடுக்கள் புரியல்ல எனக்கம்மா
ஏர் கொண்ட பூமி எழுமம்மா என்றொரு நாள்

படுவான்கரைக்குப் போனேனம்மா
பகல் பொழுதைக் கழித்தேனம்மா
தோள் வலியும் அங்குண்டம்மா
தோல்விகளும் வராதம்மா
படுவான்கரைக்குப் போனேனம்மா

# பருவான்கரைப் பெண்

குங்குமப் பெட்டிட்டு
குருணலில் உரட்டிசுட்டு
பெருமணலில் ஒன்றுகூடி
பெருமை பல பேசிடுவாள்

விடியற்காலை எழும்பி
முடிக்கும் பல வேலை செய்து
பிள்ளைகுட்டி நலம் பார்த்து
தொல்லை பல அகற்றிடுவாள்

அரைகுறை ஆடையின்றி
அணிகலங்கள் அதிகமின்றி
கணிவுடைய வாத்தை பேசி
துணிவுடனே இருந்திடுவாள்

தொட்டிலை ஆட்டித்
தொடராகப் பல பாடல்பாடி
கைவரிசை காட்டிநின்று
கரிசனையாய் இருந்திடுவாள்.

சேனைப் பயிர் செய்து
பானை நிறைய அவித்து
ஏனங்களில் போட்டு
தானமாய்க் கொடுத்திடுவாள்.

தாச்சி வைச்சி நெல்லவிச்சி
ஆச்சிங்கூட சேர்ந்து குத்தி
கீச்சிமாச்சித் தம்பலமாய்
கூச்சமின்றி ஆதரிப்பாள்

காச்சல் கறுப்பு கண்டு
மாச்சலின்றி அங்கு சென்று
ஓச்ச மருந்து கொடுத்து
எச்சில் கதை மறந்திடுவாள்

கொள்கைக்குப் பங்கம் வந்தாள்
கொடுவாளை எடுத்திடுவாள்
நடுராத்திரி என்றாலும்
விடமாட்டாள் விட்டிலையும்

அம்மியில் வைத்தரைத்து
கும்மிடாமல் சோறாக்கி
தம்பட்டம் அடிக்காமல்
தமிழிச்சியாய் வாழ்ந்திடுவாள்

அடே தம்பி என்று
அன்புடனே ஆதரித்து
நெம்புகோல் போல் அவள்
துன்பமின்றி வாழ்ந்திடுவாள்

வீட்டுத் தலைவியாய்
வாட்டமின்றி நோட்டம் பார்த்து
கோட்டுக்கு ஏறாமல்
கொள்கையுடன் இருந்திடுவாள்

# அப்பா எப்ப வருவாரம்மா

அப்பா எப்ப வருவாரம்மா
அறிவுக்கதைகள் சொல்வாரம்மா
அல்லல்படும் எமது வாழ்வை
ஆதரிக்க வருவாரம்மா
அப்பா எப்ப வருவாரம்மா

குப்பி விளக்கு மாறுமா அம்மா
தப்பிப்பிளைத்து வருவாரா அம்மா
தம்பி தங்கை முகம் பார்ப்பாரா
தேம்பி அழுவதுமாறுமாம்மா
அப்பா எப்ப வருவாரம்மா

தடகளம் பல கண்டவரென்று
தயங்காமல் நீயும் சொல்வாயம்மா
உடல்நலக் குறை வரும்போதெல்லாம்
உடனிருந்து உதவ யாரம்மா இருக்கார்
அப்பா எப்ப வருவாரம்மா

கஸ்டப்பட்டு வேலை செய்கிறாய்
காலமெல்லாம் மனம் நோகிறாய்
கோலம்போட நீயும் மறுக்குறாய்
கடன் தொல்லை எப்ப போகுமம்மா
அப்பா எப்ப வருவாரம்மா

நித்திரை உனக்கு வருதில்லை
பத்தியமாய் சோறு தின்பதுமில்லை
வாத்தியாரிடம் படிக்கவேண்டும் என்று
வாத்தைக்கு வாத்தை சொல்வாய் அம்மா
அப்பா எப்ப வருவாரம்மா

கொள்கை கோட்பாடு கொண்டவரென்று
கொள்ளையாய் கதையும் கதைக்காரென்று
வெள்ளை மனது கொண்டவர் என்றும்
நல்லாய்ச் சொன்னாய் எங்களுக்கு
அப்பா எப்ப வருவாரம்மா

ஓடி ஓடித் திரிந்து நீயும்
படிவங்கள் பல நிரப்பியே அம்மா
படிவங்களுக்குப் பதில் சொல்லியும்
விடியவில்லையே ஏனம்மா இன்னும்
அப்பா எப்ப வருவாரம்மா

ஆண்டுகள் பல கழிந்ததே அம்மா
ஆண்டவரும் வரவில்லையே அம்மா
தாண்டுவோமா வாழ்வை நாமம்மா
கண்டவர் யாரும் இல்லையா அம்மா
அப்பா எப்ப வருவாரம்மா

அப்பா ஒருநாள் வருவாரப்பா
அறிவுக்கதைகள் சொல்வாரப்பா
துப்பறிந்து துயர் துடைகவுமவர்
மறுபிறப்பிலாயினும் வருவாரப்பா
அப்பா ஒருநாள் வருவாரப்பா

## கேட்கிறதா?

கேட்கிறதா?
எதுவும் கேட்கவில்லையே
எதையும் கேட்பாரில்லையே
மனதும் சரியில்லையே
மாற்றாரும் உதவல்லையே

கேட்கிறதா?
எதைக் கேட்கிறாயப்பா
எதுவும் எவர்க்கும் புரியவில்லையே
அது அது என்று சொல்கிறார்கள்
அவருக்கும் அது விளங்கல்லையே

கேட்கிறதா?
கேட்கல்லை ராசா எனக்கு
கேட்டால் ஒருக்காச் சொல்லையா
மாட்டிவிடாமல் நானும் உன்னை
மனதில் இருத்திப் பார்ப்பேனையா

கேட்கிறதா?
மாறிமாறிப் பதில் சொல்கிறார்களே
மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்களே
அதுக்குள்ள இருப்பது அதுதானென்று
ஆளையாளை பிழை சொல்கிறார்களே

கேட்கிறதா?
ஒற்றையையும் விளங்கவொன்னா
இரட்டையையும் புரியவொன்னா
ஒற்றை ரெட்டை என்று
ஒவ்வொருநாளும் வருகுதப்பா

கேட்கிறதா?
சட்ட வல்லுனரும் சொல்கிறார்
சாக்கடையும் அதை மறுக்கிறது
ஏக்கடைந்த நாயைல்ல நாம்
ஏக்கமுடைய ஆண்மாக்களையா

கேட்கிறதா?
நன்றாய்க் கேட்கிறது
நாலு திசையும் கேட்கிறது
நாலுபேர்க்கும் கேட்கிறது
நாரதர்க்கும் கேட்கின்றது
நன்றாய்க் கேட்கின்றது.

# விளையாட்டு

அன்று சின்ன வயது
எறிக்கும் நிலவிலும் பகலிலும்
தறுதலைக் குணத்துடன்
இறுமாப்புக் கொண்டு
இரவு பகல் பாராமல்
கள்ளன் பொலிஸி
கடை வைத்தல்
கல்லுக் கொத்தல்
காசு விளையாடல்
வட்டக் காவடி
மட்டப் பந்து
தட்டுக் கோடு
உத்துக் கம்பு
ஒத்த ரெட்டை
ஊசி வைத்தல்
பிள்ளையார் கட்டை
அலம்பல் ஏற்றல்
நாயும் புலியும்
சாண் முழம்
சுரக்காய் இழுத்தல்
வார் அடித்தல்
மாங்கொட்டை போடல்

கொக்குப் பறத்தல்
கோயில் கட்டல்
சாமி வைத்தல்
சங்கிலி புங்கிலி
பத்தஞ்சி அடித்தல்
ஒழித்து விளையாடல்
ஊசி ஒழித்தல்
நொடி சொல்லுதல்
நொண்டியடித்தல்
இன்னும் எத்தனை எத்தனை
விளையாட்டுக்கள்
இவை கடந்து வந்தும்
இன்னமும் ஞாபகந்தான்
ஆடிய ஆட்டமும்
ஓடிய ஓட்டமும்
எங்கேயோ அவை எல்லாம்

## கேளடி கிளியே

கூட்டத்தில் கூடியிருந்து
கொள்கை மறுத்துரைத்து
நாட்டத்தை மாற்றுவாரடி - கிளியே
நாதாரிக் குணங்களடி

வாதாடிச் உரைத்தாலும்
வாயை அடக்குதற்கு
வாய் பார்த்து ,ருப்பாரடி - கிளியே
வம்புக் குணங்களடி

உண்மையைச் சொன்னாலும்
உணர்வை உரைத்தாலும்
வண்மையைக் கண்டிப்பாரடி - கிளியே
துன்பக் குணங்களடி

பண்டுபரவணி காட்டினாலும்
தொண்டு பல செய்தாலும்
கண்டுக்காமல் ,ருப்பாரடி - கிளியே
கல்நெஞ்சக் குணங்களடி

எங்களுக்குக் கதைசெல்லி
ஏமாற்று வித்தைகாட்டி
கழுத்தை நசிப்பாரடி - கிளியே
காட்டாறுக் குணங்களடி

எட்டி நின்று பார்த்துவிட்டு
தொட்டிலும் ஆட்டிப்போட்டு
எழுத்தில் உரைப்பாரடி - கிளியே
ஏமாற்றுக் குணங்களடி

கூடித்தான் வாழ்வோம் என்று
தேடித்தான் போனாலும்
கடி சொல்லால் கடிப்பாரடி - கிளியே
பிடிவாதக் குணங்களடி

அம்பிலாந்துறையிர
ஆதியைச் சொன்னாலும்
பாதியைத் தா என்பாரடி - கிளியே
ஏதிலாக் குணங்களடி

பாரதி இருந்தாரென்றால்
இந்த நிலைதன்னை
இப்படிப் பாடியிருப்பாரடி - கிளியே
எப்படி வாழ்வோமடி

# ஓரணி

ஒற்றுமையாய் திரண்டு
ஓரணியில் நின்று
வெற்றிபெற வேண்டு
வீரத் தமிழர் நாங்கள்

இழந்தவைகளை எண்ணி
இருப்பவைகளைக் காக்க
துருப்பு வேலை இன்றி
துடிப்புடனே இருப்போம்

பேதம் பேரம் தவித்து
பெரிது சிறிது ஒளித்து
பேரொளியைக் காண்போம்
பொறுப்புடனே வாரும்

ஜனநாயகம் காப்போம்
ஜனங்களையே மதிப்போம்
ஜாதி மதம் ஒளிப்போம்
ஜாகங்களைத் தவிப்போம்

நாட்டுடமை காப்போம்
வேட்டுக்களைத் தவிப்போம்
தோட்டம் துரவு காத்து
தோல்விகளைத் தவிப்போம்

வீர உரை தவிப்போம்
வீரரையே மதிப்போம்
அனாதைகளுக்கு உதவி
அவர்களையே காப்போம்

புண்பட்டவரைக் காத்து
பண்படவே வைப்போம்
மண்ணிணையும் மதிப்போம்
மற்றவருக்கு உதவுவோம்

உதவி செய்து வாழ்வோம்
உடமைகளைக் காப்போம்
மடத்தனத்தை மறந்து
திடமுடனே இருப்போம்

மரபுதனைக் காப்போம்
மரங்களையே நடுவோம்
கரங்களெல்லாம் ஒன்றாகி
நிரந்தரமாய் வாழ்வோம்

அபிவிருத்தி செய்வோம்
அட்டகாசம் தவிப்போம்
மட்டச் சொல்லை ஒளிப்போம்
முட்டிமோதல் தவிப்போம்

# ஆசைக் கிளி

கிளியாரே கிளியாரே எங்கு பறக்கிறாய்
கூண்டிற்குள் ,ருந்தாயே
குதுகலம் என்று சொன்னாயே
மாட்டினாலும் பறவாயில்லையென்று
மார்பு தட்டிச் சொன்னாயே
ஏனிங்கு வேகமாய் இப்போது பறக்கின்றாய்!

ஐயோ ஐயோ அதை ஏன் கேட்பாய்
பையச் சொல்லுகின்றேன் பண்பாக கேள்
மெய்யாக இது மெய்சிலுக்கும் உனக்கு
தூய்மையாக இரு துயரம் அடையாதே!

மனிதனின் மனதைப் புரியமுடியாது
துணிந்தவர் என்றும் சொல்லமுடியாது
பணிவுடையவர்களாய் நடப்பதுமில்லை
கனிவாக அவர்கள் பேசுவதுமில்லை!

நல்லதை எல்லாம் வெறுக்கின்றார்கள்
பொல்லாததைப் பொறக்கிறார்கள்
வில்லன் போல் நடக்கிறார்கள்
தொல்லைகள் பல செய்கின்றார்கள்!

சத்தியம் அவர்களிடம் கொஞ்சமுமில்லை
நித்திய வாழ்வும் நீண்டிருக்கின்றது
புத்தியாய்க்கூட நடப்பதுமில்லை
வித்தியாசமான பண்புடையவர்கள்!

ஒற்றுமைதன்னைக் காணவுமில்லை
கற்றவற்றைப் பகிர்வதுமில்லை
மற்றவரை அணைப்பதுமில்லை
சுற்றந்தனையும் பேணுவதுமில்லை!

பொய்யும் புரளியும் வெள்ளமாய் ஓடுது
கையும் களவுமாய் கனத்தவர் மாட்டி
வெய்யிலும் எறிக்குது வேண்டாவெறுப்புக்கு
தெய்வத்தில் பற்றும் இருப்பதாகத் தெரியல்ல!

பறந்துபறந்து பலதூரம்போய்
பரமசிவனிடம் நடக்கின்றதைச் சொல்லி
பகல் பொழுதினையும் அங்கே கழித்து
பற்றுக்களை அறுத்து முத்திபெற பார்க்கின்றேன்!

# ஒற்றையடிப்பாதை மனிதன்

ஏழைக்கல்வி அழிக்க எமன் வருகின்றான்
ஏட்டுச் சுரக்காயாய் அவன் திரிகின்றான்
காட்டுப் பழக்கத்துடன் இவன் அலைகின்றான்
வீட்டுவாழ்வை விட்டு உவன் கலைகின்றான்!

பண்டைக் கதை சொல்லி பண்பை அழிக்கின்றான்
இண்டைக்கு அதை நினைவில் கொள்கின்றான்
சண்டைக்கு சனத்தை அழைக்கப் பார்க்கின்றான்
மண்டை இல்லாதவன்போல் மனதை குழப்கிபுகின்றான்!

ஆணவம் கொண்டவனாய் அலைந்து திரிகின்றான்
ஆமையின் அடக்கத்தை உடைத்து எறிகின்றான்
தூய்மையின் பொக்கு'த்தை துவசம் செய்கின்றான்
தீமையின் வடிவுக்கு இலக்கணம் தருகின்றான்!

கண்டநிண்டதையெல்லாம் கருத்தில் கொள்கின்றான்
கொண்டகோலத்தை மண்டையில் பதிகின்றான்
திண்ட சோறுதனைத் துண்டாக மறக்கின்றான்
பண்டு பரவணிதனை படுகுழியில் தள்ளுகின்றான்!

கண்ணில்லாதவன் போல் கருத்தை மறைக்கின்றான்
புண்பட நெஞ்சங்களை புகழப் பார்க்கின்றான்
உன்மை சொல்வதற்கு தன்னை மறக்கின்றான்
வன்மையான வார்த்தையால் வாதம் செய்யயோசிக்கின்றான்

## ஓ மனிதா

ஆதரவுகொடு அனியாயத்தை விடு
பாதகத்தைத் தவிர் சாதகத்தை மாற்று
பாத்திரத்தை ஏந்து கோத்திரத்தைப் பார்த்து
ஆண்டவனை நேசி வாழ்கைக்கு யோசி
பாதையில் நட பாயிலும் படு
மேதாவியை குறை மேன்மைபெற உழ
மாதாவினைப்போற்று மக்களை ஏற்று
சாதனை படை சாகசம் காட்டு
நெஞ்சாரப் புகழ் அஞ்சாமல் வாழ்
வஞ்சகம் மற கஞ்சத்தனம் துற
வெஞ்சினம் அகற்று நெஞ்சிலே உறுதிகொள்
தஞ்சம் கொடு தற்புகழ்ச்சி கொள்ளாதே
வே'த்தை அழி வேவினைத் தவிர்
பாசத்தைப் பொழி ஆசையை ஒழி
பங்குதாரராய் மாறு தொங்குவாழ்வை அறு
மங்கு வாழ்வு தவிர் பொங்கு வாழ்வு வரும்
பச்சோந்தியாய் இராதே பண்புள்ளவனாய் மாறு
கொச்சைப்படுத்தி வாழாதே கொள்கையுடன் ,ரு
மிச்சம் பிடிக்கப்பழகு மேன்மைபெறும் வாழ்வு
நச்சரித்த வாழ்வை வெறு நன்மையுண்டு அதனால்
எச்சரிக்கை தவிர்த்துக்கொள் எட்டலாம் வாழ்வினை
துச்சமானவாழ்வை நீர்துன்பம் என நினையாதே
பிச்சை எடுத்து வாழ்ந்தாலும் பின்முதுகில் குத்தாதே
பூச்சொரியும் வாழ்வு புதுமைகளை நீர் படைத்தால்

# எழுதுவாரோ

கலியுக அலியாக்கள்
எலியும் தோர்த்துவிடும்
ஏதிலிகளின் செயலால்
மதில் மேல் பூனைகளை
மனதிலே நிறுத்த வேண்டும்
மந்திபோல் பாய்ந்து
முந்திவரும் அது
சிந்தை இல்லாதது
சிந்தனை அற்றது
பந்தியில் பங்குபற்றும்
வெந்தபுண்ணை கிளிக்கும்
கொள்கை இல்லாமல்
கோயிலை வலம் வருது
நல்லது தெரியாது
நாய்க்கும் ,து புரியாது
மற்றவரைக் குறைத்து
மதிப்பிட நினைக்குது
கற்றவரை அது
விற்றுவாங்க நினைக்குது
காய்தல் உவர்தலின்றி
கட்டாயம் ஆராய்ந்து
முட்டறுக்க வேண்டும்
காய் நகர்த்தப் பார்க்கிறார்கள்

# மட்டைப்பந்து விளையாட்டு

அணி - A

மண்ணை ஏமாற்றுபவன்
பெண்ணை வெட்டியவன்
தன்னைப் புரியாதவன்
தப்பவிப்பிராயம் உடையவன்
குடும்பத்தை குலைத்தவன்
தடுமாற்றம் கொண்டவன்
வீண்வம்பு கதைப்பவன்
வீரியம் இல்லாதவன்
தட்டிக் கெடுப்பவன்
தன்மானம் இல்லாதவன்
வெட்டிவிட நினைப்பவன்
வீதியில் நின்று கதைப்பவன்
கொள்கை இல்லாதவன்
கோடுதாண்ட நினைப்பவன்
நாட்டுப்பற்று இல்லாதவன்
வீட்டுப்பற்றையும் மறந்தவன்

அணி - B

மண்ணை மதிப்பவன்
பெண்ணை உயர்த்துபவன்
தன்னைப் புரிந்தவன்

தப்பவிப்பிராயம் கொள்ளாதவன்
குடும்பத்தைப் போற்றுபவன்
தடுமாற்றம் கொள்ளாதவன்
வீண்வம்பை ஒதுக்கியவன்
வீராப்பு பேசுபவன்
தட்டிக் கொடுப்பவன்
தன்மானம் உடையவன்
வெட்டிவிட நினையாதவன்
வீதிக் கதையை மறுப்பவன்
கொள்கை கொண்டவன்
கோடுதாண்ட நினையாதவன்
நாட்டுப்பற்று உடையவன்
வீட்டுப்பற்றையும் கொண்டவன்
(வெற்றிவாய்ப்பு எந்த அணிக்கு உண்டு)

# இன்னொருவிதி

நியுட்டன் மூன்று விதி சொன்னான்
நிம்மதி இழந்தவன் நான்காம் விதி ஆனான்
துன்பம் சுமந்தவன் எந்த விதி ஐயா
துயரம் வருகிறதே இன்னொரு விதிதேடி

பாசம் கலைகிறது நொந்து வெந்ததனால்
பாவப்பட்ட ஜீவன்கள் பாதையில் அலைகிறது
ஏவப்பட்ட பேய்கள் ஏலத்தில் நிற்கின்றது
கூறப்பட்ட விதி இதற்கு கொடுக்குமா இலக்கணம்

துட்டர்கள் எல்லாம் வெட்டையில் வருகிறார்
திட்டம் போட்டு வட்டையில் அலைகிறார்
முட்டிமோத கட்டங்கள் அமைக்கிறார்
வெட்டிவிடலாம் என்று வீராப்புப் பேசுகிறார்

நித்திரையிலும் சித்திரம் கீறுகிறார்
பொத்திப் பொத்தி பொய்யை வளக்கிறார்
சத்தியத்தை மறுத்து சரித்திரம் உரைக்கின்றார்
புத்தி தவறி புரியாமல் பேசுகின்றார்

ஆசைப் பேயை அலைய விடுகின்றார்
மோசம் செய்ய மோப்பம் பிடிக்கின்றார்
வேசம் போட்டு தோ'ம் எடுக்கின்றார்
பாசம் இல்லாமல் பண்பு .தவறுகின்றார

# உரிமையுடன் கல்வி வளர்ப்போம்

ஊதாரித்தனத்தை வெறுப்போம்
உரிமையுடன் கல்வி வளர்ப்போம்

வெற்றுப்பாத்திரம் தவிர்ப்போம்
கற்றவரை உருவாக்குவோம்
மற்ற மனங்களை வெல்வோம்
நற்றமிழ் சாலைகள் ஆக்குவோம் (ஊதாரி)

ஏழைக்குக் கல்வி கொடுப்போம்
கோழைகளை களைந்தெறிவோம்
வாழவைக்க வழி காட்டுவோம்
வாழைபோல் உயர்ச்சி பெறுவோம் (ஊதாரி)

சொற்களால் வாதம் செய்வோம்
சொந்த மூளையைப் பயன்படுத்துவோம்
தண்டச் சோற்றினை மறுப்போம்
தன்மானம் காத்து வாழ்வோம் (ஊதாரி)

முடிவினைச் சரியாய் எடுப்போம்
அடிதடி வாதம் தவிர்ப்போம்
பிடிவாதத்தை உடைத்தெறிவோம்
பழிவாங்குவதை புதைத்துவிடுவோம் (ஊதாரி)

எண்ணி எண்ணி உயர்வோம்
மண்ணை மதித்து நடப்போம்
திண்ணமாக இருப்போம்
துண்பந்தனையும் களைவோம் (ஊதாரி)

ஊதாரித்தனத்தை வெறுப்போம்
உரிமையுடன் கல்வி வளர்ப்போம்
நாதாரியை நட்டாற்றில் விடுவோம்
நன்மை பல செய்யத் துணிவோம்.

## கல்

கல்வி என்பது கடன்கழிப்பதல்ல
கௌரவம் பார்ப்பதுமல்ல
நல்ல சமூகத்தினை
நாட்டுக்குப் பெற்றுத் தருவது
அதனால்,
பொல்லா வினை மாழும்
வல்லோர் தமைப் போற்றுவர்
தொல்லைகள் தொலையும்
துயரம் நீங்கும்
பிள்ளைகள் உயருவர்
நல்லவை நடக்கும்
சொன்னது மேன்மைபெறும்
சொற்பொருள் பொய்க்காது
வாய்மை வெல்லும்
வாக்குப் ஜெயிக்கும்
போக்குக்கள் மாறும்
தாக்குதல் குறையும்
ஆறும் அகலும்
ஆறுதல் கிடைக்கும்
மாறுதல் வராது
மறுகதை எடுபடாது
தற்பெருமை மாறும்
மேன்மை பெறலாம்
மேலும் உயரலாம்.
மெய்ப்பொருள் அடையலாம்.

# பறந்துவா!

ஆலாவாய்ப் பற
ஆகாயமும் அடிபணியும்
காலனும் யோசிப்பான்
கருத்துள்ள பணிகண்டு
நேரிய பார்வைகெண்டு
நெஞ்சில் உறுதிகொண்டு
வஞ்சம் தனை மறந்து
தஞ்சம் கொடுக்க பறந்துவா!

நோக்குத் தவறாமல்
வாக்குப் பிழைக்காமல்
யாக்கை நிலைக்காதென்று
சாக்குப் போக்கு இல்லாமல்
தன்மானம் கொண்டு
தழிழனாய் நிமிர்ந்து
புகழினைத் தள்ளி
புரிதலுடன் பறந்துவா!

## பயம்

நீதிநெறிக்குப் பயம்
நியாயத்துக்குப் பயம்
சாதி சொல்லப் பயம்
பாதியில் நிற்கப் பயம்
கோதாரி நோய்க்குப் பயம்
கொள்கை மறக்கப் பயம்
எல்லை தாண்டப் பயம்
ஏதிலி செயல்கலுக்குப் பயம்
சண்டைக்குப் பயம்
சரித்திரம் மறக்கப் பயம்
சாஸ்திரம் கேட்கப்பயம்
தோத்திரம் சொல்லப் பயம்
தட்டிக் கொடுக்கப் பயம்
தன்மானத்துக்குப் பயம்
காட்டிக் விடப்பயம்
மாட்டிக் கொடுக்கப் பயம்
புறங்கூறப் பயம்
புரியாமல் கதைக்கப்பயம்
நரிவேலை செய்யப் பயம்
கரி புசப் பயம்
தெருவோரம் நிற்கப் பயம்
நிருவாகம் ஏற்கப் பயம்
நித்திலத்தில் வாழப் பயம்
சத்தியம் செய்யப் பயம்

கத்தி எடுக்கப் பயம்
புத்தி சொல்லப் பயம்
வித்தியாதாரம் செய்யப் பயம்
வித்தியாசமாய் இருக்கப் பயம்
சுத்திகரிக்கப் பயம்
சூத்திரதாரிக்குப் பயம்
மத்தியஸ்தம் வகிக்கப் பயம்
தெத்தி எறியப் பயம்
விட்டுவிடப் பயம்
விதண்டாவாதம் பேசப் பயம்
வீண்வாத்தை சொல்லப் பயம்
வீராப்பு உரைக்கப் பயம்
மண்ணை விடப் பயம்
தன்னை மறக்கப் பயம்
கணைதன்னை ஏவப் பயம்
சானைக்குள் இருக்கப் பயம்
பொதுச் சொத்துக்குப் பயம்
பொதுச் சொல்லப் பயம்
சரித்திரத்துக்குப் பயம்
சன்மானம் வாங்கப் பயம்
சின்னங்கள் கதைக்கப் பயம்
சிரிப்பிலே வாழப் பயம்
சீரினைப் பிரிக்கப் பயம்
கூரினை எடுக்கப் பயம்
பயம் பயம் பரமசிவனுக்கு

## தன்மானம்

அஞ்சி அஞ்சி வாழ்ந்தால் - நீ
அடங்கிப்போக வேண்டிவரும்
முடங்கி இருக்கும் காலத்தில் - உன்னை
மூலையிலே தள்ளி விடுவர்!
அப்போ.
விடங் கொண்டு வருவர் - உன்
முடரை இறுக்கிப் பிடிப்பர்
பிடரியில் ரெண்டு போட்டு - விசத்தை
தடவி குடலில் இறக்குவர்!
உயிர் பிரிய பார்ப்பர் - பின்னர்
ஊரைக் கூட்டி பிதட்டுவர்
வேரை அறுத்த சந்தோஸத்தில் - அங்கே
பாரைப் புகழ்ந்து பேசுவர்!
**இப்போ ...**
அடங்கி இருக்க வேண்டாம் - தம்பி
ஆண்மை இருக்கு உணக்கு
வாண்மையாக இருப்பதற்கு - நீ
வாழும் போது சாதிக்க வா!
வானையும் நீ தொடுவாய் - தம்பி
வாளாயும் நீ இருப்பாய்
தாளாமல் நடப்பதற்கு - நீ
தன்மானத்துடன் எழுந்து வா!

# சரித்திரம் படைப்போம்

நெருப்பிலும் நடப்போம்
நெஞ்சை நிமிர்த்தி கதைப்போம்
சாட்டையும் கொடுப்போம்
சாவையும் சந்திப்போம்
சரித்திரம் படைப்போம்
சல்லடை துடைப்போம்
குன்றையும் குடைவோம்
கொள்கை உரைப்போம்
உளவைக் காப்போம்
உறவை உயர்த்துவோம்
நிறைவை உண்டாக்குவோம்
நெல்லை விதைப்போம்
கறவை மாடு வளப்போம்
தறுதலையை ஒழிப்போம்
நிலவிலும் விளையாடுவோம்
நீண்ட தூரம் செல்வோம்
நீரிலும் எழுதுவோம்
காரிலும் கப்பலோட்டுவோம்
கல்லிலும் பதிவோம்
சொல்லிலும் உயர்வோம்
வேசத்தைக் கலைப்போம்
பாசத்தை உயர்த்துவோம்

நேசத்தை கூட்டுவேமாம்
துவேசத்தை அழிப்போம்.
தீமையை எரிப்போம்
தூய்மையாய் இருப்போம்
நோயையும் வெருட்டுவோம்
தாயையும் போற்றுவோம்
இருட்டையும் வரவேற்போம்
குருட்டுத்தனத்தை வதைப்போம்
திருட்டுத்தனம் மறைப்போம்
திருவருளைப் வணங்குவோம்

# நீண்ட பயணம்

கண்ணைக் கட்டி காட்டில் விட்டால்
மண்ணை நேசிப்பாரா மாற்று சிந்தனையினர்
தன்னைத்தானே உணராது தத்தளிக்கும்
வீணர்களை விலக்கலாமோ விடிவதற்கு முன்பாக
வாயில் சனியுடையோர் வரம்பெற வேண்டி
தாயையும் தள்ளி தாரத்தையும் விலக்கினர்
நோயை வரவளைத்து நொந்து வெந்தவரை
நாயினும் மேலாக கருத இடமுண்டோ
ஏலான்று சொல்லி இலக்கணம் வகுத்தவர்
காலூன்ற வருவாரோ கண்ணியமான செயலுக்கு
நாலுதிசையும் போக நடுங்கி திகைப்பவரை
வேலுக்கு நிகராக மதிக்க தகுதியுண்டோ
நெஞ்சில் திறனுமில்லை நேர்மைக்கு வழியுமில்லாமல்
அஞ்சி அஞ்சி அலைகிறார் அங்குமிங்கும்
கொஞ்ச நேரத்திலும் வஞ்சினமே மேலோங்கும்
வஞ்சகருக்கு தஞ்சம் கொடு கலாமோ இவ்வுலகில்
பாதியை முழுமையென்பர் முழுமையைப் பாதியென்பர்
சோதிக்கத் தெரியாமல் திண்டாடும் கூட்டதினர்
ஆதியை மறந்து அல்லலுறும் அடியார்கு
நீதியும் இடம் கொடுக்குமோ நீண்ட பயணத்தில்

# பெண்ணே

பூட்டிய விலங்கை உடைத்து
காட்டிய வழியில் நின்று
நீட்டினாய் அன்புக் கரத்ததை
நிமிர்ந்ததே உலகம் உனக்காக

ஆணாதிக்கத்துக்கு விடைகொடுத்து
வானகத்திலும் சாகசம் காட்டி
தேனாக இனித்தாய் திகட்டாமல்
திரண்டதே உலகம் உனக்காக

வண்முறை கண்டு கொத்திதெழுந்து
மண்ணகம் வியக்க வீரம்காட்டி
நாயாறுபோல நீ நீண்டுநின்றாய்
நட்புக்கொண்டதே உலகம் உனக்காக

அடுப்பூதும் பெண்ணாக இல்லாமல்
அடுக்கடுக்காய் கல்விதனைப் பெற்று
துடுப்பெடுத்தாய் துயரம் அறுக்க
துதித்ததே உலகம் உனக்காக

பங்குனி எட்டைப் பாரறிய
பொங்கு தமிழும் புடம்போட
விம்மி அழுத நாள் ஓட
வீறு கொண்டதே உலகம் உணக்காக

எண்ணிய கருமம் கைகூட
தன்னிகராகவே தலை நிமிர்ந்தாய்
கண்ணியம் புண்ணியம் பின்தொடர
எண்ணிப் பார்த்ததே உலகம் உனக்காக

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்
ஆணுக்கு நிகரே துடுப்பாட்டம்
தோட்டம் துரவெலாம் துப்பறிய
கண்விழித்ததே உலகம் உனக்காக

**வேறு**

சங்கம் தனை வளர்த்து
பங்கம் வராமல் காத்து
நொந்த மனங்களைத் தேற்றி
கந்து கவர் அகற்றினாய்பெண்ணே

புத்திகள் பல கூறி
சித்திகள் அடையச் செய்து
கத்தியின் கூர்மையாய் இருந்து
வெற்றிபெற்றாய் வீறு நடையுடன் நீயே

அல்லல் பட்ட இனத்தை
தொல்லைகள் வாராமல் காத்து
மெல்ல நடை போட்டாய்
மேலோங்கும் கிராமத்தில் தாயே

முயற்சி கொண்டு நீயும்
பயிற்சிகள் பல பெற்று
விருட்சியமாய் வளர்ந்தாய்
சீர் கொண்ட பெண்ணாய் நீ

அத்தனை தொழிலும் பெற்று
நித்திரை நிமையின்றி நிமிர்ந்து
வித்தகப் பெண்காய் வலம்வந்த
வீரப் பெண்ணே நீ வாழ்க

## ஓ மனிதனே!

பிறப்பும் இறப்பும் வாழ்வில் ஒரு தடவை
சரித்திரம் சந்ததிக்கு வாழ்க்கையில் என்றும்
சரிந்திடாமல் பாதுகாத்து நாங்கள் - அதை
நிரந்தரமாய் கொடுக்க வேண்டும் நீதிநிலைக்க!

மறைவில் இருந்து சதிசெய்வாரை ஒழிப்போம்
மண்டியிட்டு குறைகூறுவாரை மறுப்போம்
நிறைகுடம்போல் நடிப்பவரை உதைப்போம் - அவன்
துறைபோனவர்போல் கதைப்பதை தடுப்போம்!

தாய்மண்ணை மதியாதவனை விலக்குவோம்
தன்பெருமை தெரியாதவனை வெறுப்போம்
தாயை உணராதவனை தடுப்போம் - அவனை
நோயுடைய மனிதனென்று பிரகடனப்படுத்துவோம்!

## ஓ மனிதனே!

பிறப்பும் இறப்பும் வாழ்வில் ஒரு தடவை
சரித்திரம் சந்ததிக்கு வாழ்க்கையில் என்றும்
சரிந்திடாமல் பாதுகாத்து நாங்கள் - அதை
நிரந்தரமாய் கொடுக்க வேண்டும் நீதிநிலைக்க!

மறைவில் இருந்து சதிசெய்வாரை ஒழிப்போம்
மண்டியிட்டு குறைகூறுவாரை மறுப்போம்
நிறைகுடம்போல் நடிப்பவரை உதைப்போம் - அவன்
துறைபோனவர்போல் கதைப்பதை தடுப்போம்!

தாய்மண்ணை மதியாதவனை விலக்குவோம்
தன்பெருமை தெரியாதவனை வெறுப்போம்
தாயை உணராதவனை தடுப்போம் - அவனை
நோயுடைய மனிதனென்று பிரகடனப்படுத்துவோம்!

# என்னதான் நடந்தாலும்

உன்னை விட்டுச் செல்வேனோ
உடல் அழிந்தாலும்
என்னை விட்டுக்கொடுப்பேனோ
தேகம் சிதைந்தாலும்
மண்ணை விட்டுக் கொடுப்பேனோ
தன்னை இழந்தாலும்
விண்தொட நான் மாட்டேனோ
வேதனைப்பட்டாலும்
கண்ணாக இருந்திடுவேன்
கலங்கப்பட்டாலும்
கடும் முயற்சி எடுத்திடுவேன்
கஸ்ரப்பட்டாலும்
தொலைதூரம் சென்றிடுவேன்
தொல்லைப்பட்டாலும்
வலை எறிந்து சிக்கவைப்பேன்
வாழ்வைத் தொலைத்தாலும்
எதிர்வாதம் செய்திடுவேன்
எமனை அழைத்தாலும்
எட்டுத்திசையும் சுழல வைப்பேன்
கட்டி அடக்கினாலும்
விட்டுவிடமாட்டேன் நான்
முட்டி மோதினாலும்
வீண்வாத்தை உரைக்கமாட்டேன்

தன்னை மறந்தாலும்
மானாகப் பாய்ந்து வருவேன்
அம்பு வந்தாலும்
மனம்மாற மாட்டேன் நான்
மலைதான் வந்தாலும்
குடையாக இருந்திடுவேன்
நடைப்பிணம் ஆனாலும்
படைக்கு நான் அஞ்சேன்
விடைபெற இருந்தாலும்
சரித்திரத்தினை மறக்கமாட்டேன்
சாக்கடையில் இருந்தாலும்
பகுத்திரமாய்ப் பாத்திடுவேன்
கோத்திரம் இழந்தாலும்
உரிமையை உரைத்திடுவேன்
உள்ளம் நெகிழ்ந்தாலும்
ஊமையாய் இருக்கமாட்டேன்
உணர்விழந்தாலும்
கானமயில் போல் ஆடுவேன்
காலுடைந்தாலும்
கானாங்யாகோழியாய் இருக்கமாட்டேன்
கரை ஒதுங்கினாலும்
ஏலான்று சொல்லமாட்டேன்
ஏதிலிகள் வந்தாலும்
ஏறுபோல் இருந்திடுவேன்
எனை மறக்காமல்

## என் மண்ணே

நான் நேசித்த மண்ணே
நட்டாற்றில் உனை விடுவேனா
நாதியற்றுக் கிடக்கப் பார்ப்பேனா
நீசர் செயலை ஏற்பேனா
நீதியைத்தான் விடுவேனா
பொய்மையைத்தான் ஏற்பேனா
பொழுது விடியுமட்டும் இருப்பேனா
வேண்டாத செயலை நாடுவேனா

மாசறுக்க வைப்பேன்
ஆசால மேவுவேன்
ஆனைக்கும் மணி கட்டுவேன்
பூனையையும் பாயவைப்பேன்
தானையாக நின்றிடுவேன்
தலை எழுத்தை மாற்றிடுவேன்
தவறாமல் எழுந்திடுவேன்
தரணியிலே வந்திடுவேன்

ஊதாரிகளை ஒடுக்குவேன்
கோதாரிகளை அடக்குவேன்
நாதாரிகளை வாட்டுவேன்
மேதாவிகளை வரவேற்பேன்
மாதாவிற்குக் கரங்கொடுப்பேன்
மந்தைகளை அடக்கிடுவேன்
சிந்தைதனை வளர்த்திடுவேன்
செயலதில் கண்ணாயிருப்பேன்

# இருக்கவேண்டியது

அடக்கம் இருக்கவேணும்
அரட்டை இருக்கக்கூடாது
ஆண்மை இருக்க வேணும்
அலங்காரம் இருக்ககூடாது
பிடிவாதம் இருக்கவேணும்
பிதட்டல் இருக்கக்கூடாது
கூடி இருக்கவேண்டும்
குத்தாட்டம் போடக்கூடாது
கதையைக் கேட்கவேணும்
கடமையில் தவறக்கூடாது
வீறுகொண்டு நடக்க வேணும்
வீணாக நேரத்தை கழிக்கக்கூடாது
கௌரவம் இருக்க வேண்டும்
கேட்டுவாங்கக்கூடாது
வெற்றிபெற முயலவேண்டும்
வெறியாக இருப்பதைத் தவிர்த்துவிட்டு.
(தன்மை, முன்னிலை, படர்க்கைக்கு)

# உன்னை விட்டுச் செல்வேனோ

உன்னை விட்டுச் செல்வேனோ
உடல் அழிந்தாலும்
என்னை விட்டுக்கொடுப்பேனோ
தேகம் சிதைந்தாலும்
மண்ணை விட்டுக் கொடுப்பேனோ
தன்னை இழந்தாலும்
விண்தொட நான் மாட்டேனோ
வேதனைப்பட்டாலும்
கண்ணாக இருந்திடுவேன்
கலங்கப்பட்டாலும்
கடும் முயற்சி எடுத்திடுவேன்
க்'ரப்பட்டாலும்
தொலைதூரம் சென்றிடுவேன்
தொல்லைப்பட்டாலும்
வலை எறிந்து சிக்கவைப்பேன்
வாழ்வைத் தொலைத்தாலும்
எதிர்வாதம் செய்திடுவேன்
எமனை அழைத்தாலும்
எட்டுத்திசையும் சுழல வைப்பேன்
கட்டி அடக்கினாலும்
விட்டுவிடமாட்டேன் நான்

முட்டி மோதினாலும்
வீண்வாத்தை உரைக்கமாட்டேன்
தன்னை மறந்தாலும்
மானாகப் பாய்ந்து வருவேன்
அம்பு வந்தாலும்
மனம்மாற மாட்டேன் நான்
மலைதான் வந்தாலும்
குடையாக இருந்திடுவேன்
நடைப்பிணம் ஆனாலும்
படைக்கு நான் அஞ்சேன்
விடைபெற இருந்தாலும்
சரித்திரத்தினை மறக்கமாட்டேன்
சாக்கடையில் இருந்தாலும்
பகுத்திரமாய்ப் பாத்திடுவேன்
கோத்திரம் இழந்தாலும்
உரிமையை உரைத்திடுவேன்
உள்ளம் நெகிழ்ந்தாலும்
ஊமையாய் இருக்கமாட்டேன்
உணர்விழந்தாலும்
கானமயில் போல் ஆடவேன்
காலுடைந்தாலும்
கானாங்யாகோழியாய் இருக்கமாட்டேன்
கரை ஒதுங்கினாலும்
ஏலான்று சொல்லமாட்டேன்
ஏதிலிகள் வந்தாலும்
ஏறுபோல் இருந்திடுவேன்
எனை மறக்காமல்

# எழுக தம்பி !

வெட்டியெறிய எழுந்துவாரும் தம்பி -நம்மை
கட்டி வைக்க நினைக்கிறான் காவாலி
தட்டிக்கேட்க இவனுக்கென்ன தகுதி - நீ
கொட்டமடக்க கொள்கையுரைடா தம்பி!

பிரிவினையைத் தூண்டுறான் பித்தன் - அவனை
பின்னியெடுக்க எழுந்துவா தம்பி
நுனிப்புல்லை மேய்த அவனோ - நம்மை
நுங்னென என்னப் பாக்கிறான் தம்பி!

திட்டம் போடுது கூட்டம் - அதை
திண்டாட வைக்க எழுந்துவா தம்பி
சட்டமும் இருக்குது தம்பி - நம்
சரித்திரம் மாறலாமோ சாக்கடைக்குத் தம்பி!

பெருமையைப் பேசோனும் தம்பி - நம்
பின்னுள்ளோர் வாழனும் தம்பி
குலங்காக்க வரவேணும் தம்பி - நம்ம
குலதெய்வம் உதவுவார் அதற்கு தம்பி!

பேய்க்கதை பேசுவார் தம்பி - அவனை
பின் கதவால் தள்ளிவிடு தம்பி
ஓய் என்று உரத்துப்பேசு தம்பி - அவர்களை
ஓங்கி அறைடா ஊரைக் காக்க தம்பி!

சந்ததி வாழெனும் தம்பி - நம்
சரித்திரம் நிலைக்கொணும் தம்பி
சுற்றம் சொந்தம் எல்லாமே தம்பி - நம்மை
நம்பி இருக்குது நினைத்துப்பார் தம்பி!

எலியை வளர்த்து பூனைக்குக் கொடுக்கலாமோ தம்பி - இந்த
ஏதிலிகள் செயலுக்கு அஞ்சலாமோ தம்பி
மதியாதார் தலைவாசல் மிதிக்கலாமோ தம்பி - நாம்
மானமுடையவர் என்பதைக் காட்டா தம்பி!

## பாப்பா

சாவியைப் போடாதே - பாப்பா
ஆவியை ஏற்காதே
தாவிப்பிடிக்காதே - பாப்பா
ஓடியடியடிக்காதே

வேட்டுக்கள் வையாதே - பாப்பா
றோட்டிலே நில்லாதே
காட்டுக்குள் செல்லாதே - பாப்பா
நோட்டுக்கள் போடாதே

மூக்கு நுழைக்காதே - பாப்பா
யாக்கை நிலைக்காதே
வேக்கிலே அல்லாதே - பாப்பா
சோக்கையும் காட்டாதே

மரத்தை வெட்டாதே - பாப்பா
உரத்தை மறக்காதே
இனத்தை உயர்த்தவே - பாப்பா
குணத்தை மாற்றிவிடு

# இலக்குப்பார்

எண்ணமதை மனதில் கொண்டு
ஏற்றம்தனை உயர்வாய் எண்ணி
நோக்கம்தனை நெஞ்சினில் சுமர்ந்து
வாக்கு மாறாமல் இலக்குப்பார்

தோல்வி வெற்றி வரும்
தோள்கொடுத்தோர் மாறவரும்
நாளெல்லாம் நகர்ந்து செல்லும்
கோலத்தை முடிக்க இலக்குப்பார்

ஏழை வாழ்வை உயர்த்தவரும்
கோழைதனத்தை ஒடுக்கவரும்
கொள்கை செயலிழக்கும்
கோட்டானை அடக்க இலக்குப்பார்

கட்சி ஓவென்று இருக்கும்
காட்சி ஓடி ஒழிக்கும்
மீட்சி மக்களுக்கு வரும்
ஆட்சி வர இலக்குப்பார்

# பின்முதுகில் குத்தாதே

பச்சோந்தியாய் இராதே
பண்புள்ளவனாய் மாறு
கொச்சைப்படுத்தி வாழாதே
கொள்கையுடன் இரு
மிச்சம் பிடிக்கப்பழகு
மேன்மைபெறும் வாழ்வு
நச்சரித்த வாழ்வை வெறு
நன்மையுண்டு அதனால்
எச்சரிக்கை தவிர்த்துக்கொள்
எட்டலாம் வாழ்வினை
துச்சமான வாழ்வை நீர்
துன்பம் என நினையாதே
பிச்சை எடுத்து வாழ்ந்தாலும்
பின்முதுகில் குத்தாதே
பூச்சொரியும் வாழ்வு
புதுமைகளை நீர் படைத்தால்

# கோழி

கூவத்தொடங்கி விட்டது
கூரையில் மட்டுமில்ல
கூண்டிலும் இருந்து
தன்னிலை மறந்துதான்
பொல்லாத குறைகூறும்
பொழுது போவது தெரியாது
மக்களை ஏமாற்ற
எப்பக்கமும் கூவும்
சொல்லும் விளங்காது
செயலும் புரியாது
பார்த்துப் பார்த்துக் கூவும்
பாவம கோழிக்கு
ஆண்கோழி கூவும்
பெண்கோழி கொக்கரிக்கும்
முட்டையிடாது
முழுசிப்போய் நிற்கும்
பிள்ளைக் கோழியெல்லாம்
பேயறைந்தது போல் நிற்கும்
விடியற் காலையில் கூவாது
வேண்டுமென்றே கூவுதென்று
வியர்த்துப்போய் நிற்கும்
இந்திரன் கோழியல்ல
இந்தக்கோழி இது

# எழுந்துவா மகனே

எழுந்துவா மகனே
எழுதுகோலை எடுத்து நிமிர்ந்துவா!

வீழும் காலம் போச்சுதென்று
வீறுகொண்டு நடந்துவா!

தவழும் காலம் மாய்ந்ததென்று
தன்மானத்துடன் ஓடிவா!

புகழ்ந்த காலம் போச்சுதென்று
பொய்ப்பேச்சினை உதறிவா!

நிகழ்காலம் உனக்கென்று
நேராக தொடர்ந்துவா!

இறந்தகாலம் ஒழிந்ததென்று
சிறந்த மனதை தேற்றிவா!

எதிர்காலம் அமையுமென்று
ஏணியேறி சாதிக்கவா!

## சகுனி

சகுனி
பகடக்காயை உருட்டிவிட்டுப்
பதுங்கி இருந்து பார்க்கிறார்
பார்த்தசாரதிக்குத் தெரியாதென்று
அங்கு
அங்கம் புரள்கிறது
அடமானம் நிகழ்கிறது
துரோபதை துயிலைச்
துச்சாதனன் உரிகின்றான்
மிச்சம் உள்ளவர்
வீடுவீடாய்ச் சென்று
வீண்வம்பு இழுக்கின்றார்
கசிப்புக்கு ஆளாகி
உசுப்புடன் நிற்கின்றார்
தட்டிவிட்டுப்போட்டு
எட்டி நின்று பார்க்கின்றார்
மா மா வீரனென்று
மார்பு தட்டுகின்றார்
திருதுராட்டினனோ
தெருவெல்லாம் திரிகின்றான்
மக்கள் வாழ்வை
சிதறடிக்க வருகின்றான்
துன்பத்தில் புதைக்க

துச்சாதனன் துடிக்கின்றான்
இன்பத்தை அழிக்க
விம்பத்தைக் காட்டுகின்றான்
பொறுமையில் வீமன்
வெறுமையாய் நிற்கின்றான்
அடம்பிடித்த வேதனையில்
அருச்சுணன் துடிக்கின்றான்
நாலு திசையும் புடம்போட
நகுலன் வருகின்றான்
வெற்றிக்கு சாத்திரம் பார்த்து
சகாதேவன் நிற்கின்றான்
பொறு பொறு என்று
பொங்கி எழுகின்றார் தருமர்
துரியோதனாரியார்இ
மாவீரன் புதை குழியில்
கால் குத்தி நிற்கின்றார்
மானங் கொண்டவர் என்று
இனவாதம் கக்குகின்றார்
மடியமாட்டோமென்று
மார்பு தட்டுகின்றார்
கொலை செய்த கூட்டமும்
கொள்கை உரைக்கின்றது
பச்சைப் பசளியெல்லாம்
கொச்சைத் தமிழ் உரைக்கிறது
மிச்சம் வைக்கமாட்டோமென்று
மீசை முறுக்கி நிற்கின்றார்

கைக்குழந்தையெல்லாம்
கைதட்டிச் சிரிக்கிறது

**தருமர்**

பொறு பொறு தம்பிகாள்
பொறுத்தார் அரசாழ்வார்
பொங்கியவர் காடுறைவர்
தயங்காமல் நில்
வினை விதைத்தவன்
வினையறுப்பான்
திணை விதைத்தவன்
திணை அறுப்பான்
என்று ஆசீர்வாதம் கூறுகின்றார்
பகவான் மௌனம் கொண்டு
கொடுப்புக்குள் சிரிக்கின்றார்???

## கூட்டம்

கொள்கையில்லாக் கூட்டம்
கொடுமையின் ஆட்டம்
தெருவிலே நாட்டம்
கருவையும் வாட்டும்
தவிடு பொடியாக்கும்
தரத்தைக் குறைக்கும்
வி'த்தை ஏற்றும்
வீண்வம்பு உண்டாக்கும்
வீரியத்தைக் குறைக்கும்
வீராப்புக் கதைக்கும்
வேதனையை உண்டாக்கும்
சாதனையை அழிக்கும்

# யார் கீழ்ச்சாதி

கிராமத்தைப் புரியாதவன்
கிரமமாக நடக்காதவன்
கிட்டவிருந்து குழி வெட்டுபவன்
கேலி கிண்டல் கதைப்பவன்
பெண்ணை ஏமாற்றுபவன்
மண்ணை மதியாதவன்
தன்னைப் புரியாதவன்
தண்டச்சோறு தின்பவன்
கல்வி கேள்வி இல்லாதவன்
தொல்லைகளைச் சுமந்தவன்
நல்லதை நினைக்காதவன்
நடைமுறை புரியாதவன்
தற்புகழிச்சி கொண்டவன்
தரங்கெட்டு நடப்பவன்
காட்டிக் கொடுப்பவன்
களிசறவேலை செய்பவன்
மாட்டி விடுபவன்
மக்களை இகழ்பவன்
கொள்கை இல்லாத
கொடும்பாவி கீழ்சாதியாம்.

# ஒற்றையடிப்பாதை மனிதன்

ஏழைக்கல்வி அழிக்க எமன் வருகின்றான்
ஏட்டுச் சுரக்காயாய் அவன் திரிகின்றான்
காட்டுப் பழக்கத்துடன் இவன் அலைகின்றான்
வீட்டுவாழ்வை விட்டு உவன் கலைகின்றான்!

பண்டைக் கதை சொல்லி பண்பை அழிக்கின்றான்
இண்டைக்கு அதை நினைவில் கொள்கின்றான்
சண்டைக்கு சனத்தை அழைக்கப் பார்க்கின்றான்
மண்டை இல்லாதவன்போல் மனதை குழப்கிபுகின்றான்!

ஆணவம் கொண்டவனாய் அலைந்து திரிகின்றான்
ஆமையின் அடக்கத்தை உடைத்து எறிகின்றான்
தூய்மையின் பொக்கு'த்தை துவசம் செய்கின்றான்
தீமையின் வடிவுக்கு இலக்கணம் தருகின்றான்!

கண்டநிண்டதையெல்லாம் கருத்தில் கொள்கின்றான்
கொண்டகோலத்தை மண்டையில் பதிகின்றான்
திண்ட சோறுதனைத் துண்டாக மறக்கின்றான்
பண்டு பரவணிதனை படுகுழியில் தள்ளுகின்றான்!

கண்ணில்லாதவன் போல் கருத்தை மறைக்கின்றான்
புண்பட நெஞ்சங்களை புகழப் பார்க்கின்றான்
உன்மை சொல்வதற்கு தன்னை மறக்கின்றான்
வண்மையான வார்த்தையால் வாதம் செய்யயோசிக்கின்றான்

# விதி

பந்து வீச்சில பறக்கும் விக்கட்
நொந்துபோவான் எதிரணிப் பையன்
வெந்த இரும்பாய் இருக்குமது
சந்துபொந்தெலாம் பாயுமிது
தடுக்கமுடியாமல் தவறும் அணி
துடுப்பும் உடையும் களத்தில் நிதம்
கடுப்புவரும் விதிமுறை விடாது
நடுவருர் கூட்டமும் தடுமாறும் இதில்
தொடந்து சரியும் வேகமாய் விக்கட்
கடந்து செல்லும் புள்ளியின் ஏற்றம்
நடந்து செல்வான் ஆட்டம் இழந்தவன்
படந்து வரும் உலகப் பார்வையும்

## கண்விழி மகனே !

கண்ணின் மணியே
கருத்தின் உறைவிடமே
காலத்தை வென்றவனே
கண்விழிரா கண்விழிரா
காட்டாறு ஆகிட்டது
காலமெல்லாம் ஓடிட்டது
கோலம் அழிவதற்கு
பாலகனே கண்விழிரா
பொய்ப்பேச்சி அதிகமாச்சி
பொல்லாத காலமாச்சி
நல்லது நடப்பதற்கு
வல்லவனே கண்விழிரா
நெஞ்சிலே ஒன்றுமில்லை
பஞ்சான வாத்தைகளே
அஞ்சாமல் வாழ்வதற்கு
கஞ்சனே கண்விழிரா
மக்கள்தான் வாழவேண்டும்
மடிகள் கணக்கவேண்டும்
முடிவுகள் வருவதற்கு
நெடியவனே கண்விழிரா
வேசங்கள் கழையவேண்டும்
வேடிக்கை அழியவேண்டும்
கோரிக்கை நிலைப்பதற்கு
கோமகனே கண்விழிரா

மண்ணென்று சொல்கிறார்கள்
கண்ணென்று பேசிறார்கள்
திண்ணமாய் நாம்வாழ
திரவியமே கண்விழிரா
தேவைகள் நிறைவுபெற
சேவைகள் வானுயர
போர்வை கழைந்துவர
ஆரணியா கண்விழிரா
பட்டங்கள் பறக்குதென்று
பல்லையும் காட்டுறார்கள்
நெட்டூரம் ஒளிவதற்கு
நித்திலனே கண்விழிரா
கண்விழிரா கண்விழிரா
கண்ணணின் மறுபிறப்பே
புண்ணியனே கண்விழரா
பூலோகம் ஆழ்வதற்கு

## ஒளி ஏற்று

ஏழையின் வாழ்வில் ஏற்று ஒளி
கோழையின் செயலை அடியோடு ஒழி
கொள்கை இல்லா கொடூரனை அழி
கொடுமைப்படுத்தும் வஞ்சகன் நீயே அலி

மனம் இல்லா மக்களை மாற்று
குணமில்லாத கொடியோனைத் தூற்று
ஏனம் ஏந்தும் வாழ்வை அகற்று
மானம் காக்கும் மாகோனைப் போற்று

சிந்தனை இல்லாச் சிறுமையை ஓட்டு
சீறிப்பாயும் சிறுத்தையை மாற்று
மாறிப்பேசும் மடயனைத் தாக்கு
மண்டியிட மறுக்கும் மதனைப் போற்று

வறட்டுக் கௌரவத்தை வாய்க்காலில் புதை
முறட்டுத் தனத்தை மூலையில் சிதை
மூன்று போகம் நெல்லினை விதை
ஆளும் மகனுக்குக் கொடுக்கனும் சதை

கொடுமை சொல்லும் கொட்டனை முடக்கு
கடுமை பேசும் கயவனை அடக்கு
புலையனாய் திரியும் பொய்யனை மடக்கு
நிலைமை உணரும் மனத்தினை தூக்கு

தீவினை நினையா தேவன் தியாகி
திண்டாடித் திரிபவன் புமியில் பரதேசி
காணாமல் பேசும் காடையன் விரோதி
கண்டதுபோல் நடிக்கும் கயவன் துரோகி

# ஏன் மகனே ஓடுகிறாய்

ஏன் மகனே ஓடுகிறாய்
நல்லதைச் செய்கிறார்கள்
நாலு தேசம் புகழ்கிறது
பொல்லாப்பு இல்லாமல்
எல்லாமே நடக்கிறது
ஏன் மகனே ஓடுகிறாய்!

கதையைக் கேளம்மா
இருக்கமுடியவில்லையம்மா
இருட்டடிப்புச் செய்யவேணும்
தெருத் தெருவாக நின்று
தேவையில்லாம கதைக்க வேணும்
கதையைக் கேளம்மா!

பொல்லா வினைவந்து சூழும்
எல்லா உலகமும் தூற்றும்
கல்நெஞ்சம் என்று ஏசும்
கசாபோக்கிலி என்று கூறும்
ஏன் மகனே ஓடுகின்றாய்!

தோற்றினாலும் போற்றினாலும்
தோல்வி நான் அடைந்தாலும்
தொல்லை எனைச் சூழ்ந்தாலும்
வல்ல புகழ் அழிந்தாலும்
கதையைக் கேளம்மா!

நிம்மதி இழந்திடுவாய்
நீண்ட நாள் வாழமாட்டாய்
கல்வியில் முன்னேறமாட்டாய்
காலனும் ஏற்கமாட்டான்
ஏன் மகனே ஓடுகின்றாய்!

சொந்தத்தை இழந்தாலும்
துயரத்தைச் சுமந்தாலும்
வடுப்பட்டு நின்றாலும்
வலது கை போனாலும்
கதையைக் கேளம்மா!

வீடு வீடாய்ச் செல்லாதே
விடுபட நினைக்காதே
மற்றவனைத் தூண்டி
மாட்டுப்பட வைக்காதே
ஏன் மகனே ஓடுகின்றாய்!

சீலை நான் உடுத்தாலும்
சீர்கெட்டுப் போனாலும்
சீரழிந்த வாழ்வு
சீக்கரம் வந்தாலும்
கதையைக் கேளம்மா!

கெட்டுப்போவாய் நீயும்
கேடுகளும் வந்து சூழும்
மானம் இழந்தாய் என்று
மாடாக நினைத்திடுவார்
ஏன் மகனே ஓடுகின்றாய்!

## எல்லை மீறினால்

எல்லை தாண்டிப்போகுது
எருமை மாடு கனைக்குது
தொல்லை தர நினைக்கிறார்
சொல்லை மீற முடியுமோ!

நெல்லை விதைத்த கையுமே
கல்லை நினைக்க முடியுமா
பல்லைக் காட்டும் கூட்டமும்
வாலை ஆட்டப் பார்க்குது!

தலை கழண்டு போயினும்
சரித்திரந்தான் மாறுமா
விலை மதிக்க முடியுமா
வீறுகொண்ட செயலுக்கு!

வெந்த புண்ணில் வேலையே
வேணுமென்று தொடுக்கிறார்
தந்திரந்தான் நிலைக்குமா
முந்திச் செல்ல முடியுமோ!

பகல் குருடர் இணைந்துதான்
பண்பாடுதனை உடைக்கிறார்
பகற்பொழுது முடியுமுன்
பகடைக்காயை நிறுத்தொணும்

# ஆவி வருது

காவி உடை தரித்தாலும்
மேவி நடக்கப் பார்த்தாலும்
கோயில் குளம் ஏறினாலும்
தாவித்தாவிப் பிடிப்பதற்கு
ஆவி வருது சாவி வடிவில்

அநியாயமாய்க் கொன்ற உன்னை
அதறப்பதற அழித்தொழிக்க
அண்டமெல்லாம் அலைந்து திரிந்து
பண்டப்பொருளைத் தூக்கியெறிந்து
ஆவி வருது சாவி வடிவில்

காட்டில் என்னை அலையவிட்டு
கண்ணைக்கட்டிக் குன்றில் தள்ளி
மண்ணைவெட்டி மூடிவிட்டு
மார்பு தட்டிய உன்னைத்தேடி
ஆவி வருது சாவி வடிவில்

திட்டம்போட்டு அழித்துவிட்டு
வட்டம்போட்டு பாட்டி போட்டு
வகைவகையாய் வாத்தை பேசி
தொகை பார்த்த உன்னைத்தேடி
ஆவி வருது சாவி வடிவில்

ஓடி நீயும் ஒழிக்க ஒண்ணா
காடுகரம்பும் இடந்தராது
மேடுபள்ளம் தாண்டினாலும்
ஓடவிட்டு உன்னைத்தாக்க
ஆவி வருது சாவி வடிவில்

மறுபிறப்பில் பிறந்தாலும்
இறையிருப்பில் இருந்தாலும்
இறைத்துத் தானம் கொடுத்தாலும்
இரக்கமில்லா உன்னைத்தேடி
ஆவி வருது சாவி வடிவில்

பெற்றார் உற்றார் அழுதபோதும்
சற்றே இரக்கம் காட்டாநின்று
பற்ற வைக்கும் வாத்தை கூறி
குற்றம் புரிந்த உன்னைத்தேடி
ஆவி வருது சாவி வடிவில்

# இளைஞர்கள்

இரும்பு இதயங்கொண்ட இளைஞர்கள்
கரும்பின் நுனிபோல் இருப்பதில்லை
துரும்பு வேலை அவரிடமில்லை
துருவி ஆயும் மனதினை உடையோர்

முரண்பாடுதனைத் தவிர்த்திடுவார்
முற்கோபத்தை வெட்டி எறிவார்
நிரந்தர வாழ்வினை நினைவிற்கொள்வார்
சிரமம் பலதை தவிர்த்துவிடுவார்

உரமாக அவர்கள் உள்ளொளி பெறுவார்
ஊக்கமதனைக் கைவிடமாட்டார்
ஏக்கம் தவிர்த்து வாழப் பார்ப்பார்
எல்லோருடனும் இணைந்து செல்வார்.

பகுத்தறிவு அவர்களிடம் உண்டு
தொகுத்துக்கூறும் துணிவும் உண்டு
கருத்துக்சொல்ல அறிவும் உண்டு
காலம்கணிக்கும் திறனும் உண்டு

சமூகக் கல்வி அவரிடம் உண்டு
சங்கடம் தவிர்க்கும் மனமும் உண்டு
சகலகலை ஆட்டமும் உண்டு
விலகிப்போகும் மனமும் உண்டு

# இதயமே? எங்கே?

கடமையைச் செய்கின்றேன்
கண்ணியமாய் இருக்கின்றேன்
மடத்தனத்திற்கு இடமில்லை
கடன்படவுமில்லை
விடுபட்டுச் செல்லவில்லை
வீண்வம்பு பேசவில்லை
தானாகச் செயற்படுகின்றேன்
தற்பெருமை எனக்கு வராது
முற்போக்குக் குணமுண்டு
முரண்பாடு தடுத்திடுவேன்
வெற்றுப் பாத்திரம் ஏந்தமாட்டேன்
வறட்டுக் கௌரவம் எனக்கில்லை
தெட்டத்தெளிவாய் ,ருக்கின்றேன்
விட்ட இடத்தில் தொடருவேன்
தட்டுத்தடுமாறமாட்டேன்
தொட்டதெல்லாம் பொன்விளையும்
தொல்லைகளும் கழன்றுவிடும்
வல்ல தெய்வம் இருக்கிறார்
வாய்ப்புக்கள் பல வரும்
வாக்குச் சரியாக ,ருந்தால்
நோக்கும் பிழைக்காது
போக்கும் மாறாது
நேருக்கு நேர் கதைப்போம்
நெஞ்சமெல்லாம் இணைந்திடுவோம்.

# படிப்பு

பல்கலைக்கழகம் செல்லவேணும்
பலகலை அங்கு கற்கவேணும்
தொல்லைகள் யாவும் அகல்வதற்கு
தொலை தூரம் நீ செல்ல வேணும்
அகந்தை அடங்கி படிக்கோணும்
அகத்தில் உறுதி நிலைக்கவேணும்
முகத்தில் அதுதான் தெரிய வேணும்
முகவரி சொல்ல வாழ வேணும்
பண்புடன் அன்பு மேலோங்கணும்
பாண்டித்தீயம் பெறவேணும்
தாண்ட வேணும் பல படிகள்
தன்னடக்கம் கொள்ள வேணும்
எங்கள் நாடு உயர வேணும்
தங்கள் கரங்கள் பலப்படணும்
வங்க தேசம் செல்லோணும்
தொங்கும் வாழ்வை ஒழிக்க வேணும்

# ஏழை வாழ்வு

கொள்கை கோட்பாட்டுடன்
கொடும்பாவி எரிக்கவில்லை
கொலை செய்யவில்லை
கூட்டி விடவில்லை
காட்டிக் கொடுக்கவில்லை
மாட்டி காட்டவில்லை
ஏழையின் வாழ்வுக்கு
ஒளியேற்ற வருகின்றோம்
எட்டி எட்டிப் பார்க்கார் சிலர்
தட்டி விட்டு நிற்கார் பலர்
ஏழைக்கு வந்த வீட்டை
மாமா மச்சான் என்று
பட்டியல் போட்டு
கட்டிவிடுகிறார் சதிகாரர்
ஒதுக்கப்பட்டவர்கள்
ஓரங்கட்டப்பட்டார்கள்
விளிம்பு நிலையில் இருந்து
விழிவழியே கண்ணீர்
வழிந்தோடகின்றது
போராடியவர்கள் யாவரும்
திண்டாடி நிற்கின்றார்
திருப்தியாய்ச் சோறு
திண்ணவும் இன்றி
விடியவில்லை என்று
வெறுத்து ஒதுக்குகின்றார்
விட்டில் புச்சி என்று
வெருட்டி அடிக்கின்றார்
கண்ணீரும் கம்பளையுமாய்
காலம் ஓடுகிறது
கவலைதான் வாழ்வில்?

# எங்கள் கிராமம்

எங்கள் கிராமம் தூங்கலாமோ
இடி விழுந்தாலும் நகரலாமோ
வரலாற்றை விட்டு ஏங்கலாமோ
வாய்ச்சொல்லை நம்பி ஏமாறலாமோ

நாரதரின் செயலை நம்பலாமோ
ஊதாரி வருகையை ஏற்கலாமோ
கொள்ளிவாய்ப் பேய்கள் வரலாமோ
கொள்கை இழந்து நிற்கலாமோ

எல்லை காக்காமல் ஓடலாமோ
ஏதிலிகள் செயலை ஏற்கலாமோ
புண்பட்டு நாம் வாழலாமோ
பண்பட்ட எம்மக்கள் பணியலாமோ

தன்கரம் இருக்க அஞ்சலாமோ
தறுதலைகள் செயலுக்கு கெஞ்சலாமோ
அரவம் கண்டு துஞ்சலாமோ
ஆன்மை உடையவரை விஞ்சலாமோ

பாதை மாறிப் போகலாமோ
பாதகர் முயற்சியை விடலாமோ
நீதி நெறி தவறாலாமோ
நீசர் செயலை ஏற்கலாமோ?

MSW